DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE NO.I, WALAJAPET, RANIPET DISTRICT.

STC.No. 131/2025

LW -1 Deposition of Witness for – Prosecution : PW1
Defence :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்திரன் | தொழில் | : | விவசாயம் |
| த/பெ | : | அனுமந்தன் | வயது | : | 75/2025 |
| கிராமம் | : | ஓச்சேரி | | | |
| தாலுக்கா | : | நெமிலி | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

தேதி – 05.11.2025

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை – அ.சா.1**

1. 27.11.2023 ஆம் தேதி மாலை 05.00 லிருந்து 05.30 மணிக்குள் நானும், ஆஜர் எதிரியான எனது தம்பியும் ஒரே இடத்தில் மேல்பாகம், கீழ்பாகம் என நிலத்தை வாங்கிய இடத்தில் டிரில்லர் மூலம் உழுதுகொண்டிருந்தார். வண்டியை நிறுத்தும்படி கூறினேன், வண்டியை நிறுத்ததால் பிரேக் போட்டு நான் வண்டியை நிறுத்தியபோது, எனது வலது கையை பிடித்து தட்டி விட்டார், வலது கையின் நடுவிரலில் எனக்கு வீக்கம் ஏற்பட்டது. கையால் என்னை இழுத்துவந்து சாலையில் தள்ளிவிட்டார். அதைக்குறித்து புகாரினை நான் காவல் நிலையம் சென்று கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை**

2. எனக்கு எழுத படிக்க தெரியும். நான் முதல் விசாரணையில் கூறியதுபோல் நான் கொடுத்த புகாரில் எழுதி கொடுக்கவில்லை என்று சொன்னால் ஆமாம், அதிலுள்ள கையொப்பம் மட்டும் தான் என்னுடையது, அதிலுள்ள விவரங்கள் நான் எழுதியது இல்லை. புகார் மனுவில் உள்ள திருத்தங்களை நான் செய்யவில்லை. நிலம் சம்மந்தமாக எனக்கும், எதிரிக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பு விரோதம் எதுவும் இல்லை. மேற்படி நிலங்கள் என் பெயரிலும், எதிரி பெயரிலும் சேர்த்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நிலத்தை உட்பிரிவு செய்வதற்கு முயன்றபோது, எதிரி மனு செய்து அதற்கு ஆட்சேபணை செய்திருந்தார். அதிலிருந்ததான் எங்களுக்குள் விரோதம் என்றால் சரிதான். பாகம் பிரிப்பதற்கு முன்பே நான் சொத்தை என் மகன் பெயருக்கு எழுதி கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். அதுதொடர்பாகவும் எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

3. போலீசார் விசாரணையில் முதல் விசாரணையில் கூறியதுபோல் எந்த விவரங்களையும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நிலத்தை நான் சாகுபடி செய்தேன் என்பதற்காக ஆவணங்கள் எதையும் போலீசாரிடம் தரவில்லை என்றால் சரிதான். பவர் டிரில்லர் எதிரிக்கு சொந்தமானது. எங்களுக்கு சொந்தமான பூர்வீக சொத்து பாகப்பிரிவினை சம்மந்தமாகவும் எனக்கும், எதிரிக்கும் இடையே பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். அது தொடர்பாக எதிரி என் மீதும், மற்ற சகோதரர்கள் மீதும் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். நான் பாகம் பிரிப்பதற்கு முன்பே என் பெயரிலும், எதிரி பெயரிலும் சேர்த்து வாங்கிய சொத்தை என் மகன் பெயருக்கு எழுதி வைத்ததை எதிரி கேட்டதாலும், குடும்ப சொத்தில் பாகப்பிரிவினை சம்மந்தமாக வழக்கு போட்டதாலும், எதிரியின் மீது விரோதத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான்

நீதிமன்றத்தில் கூறியதுபோல், எந்த குற்ற சம்பவமும் எதிரியால் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியை மிரட்டி பணியவைக்க வேண்டும் என்பதற்காக உதவி ஆய்வாளர் துணையுடன் ஒரு தவறான வழக்கு எதிரியின் மீது போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த புகார் இவ்வழக்கில் இல்லை.

மறு விசாரணை இல்லை.

R S PRAGANTHAA

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by R S PRAGANTHAA
Location: Walajapet
Date: 2025.11.05 19:02:40 +0545

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1,

வாலாஜாபேட்டை.